

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், எழும்பூர் தெற்கு பகுதியில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம் 13 உதய நாளில் பிறந்த வளர்பிறைகள்! உள்ளன்போடு அணிவோம் மோதிரங்கள்!! எனும் தலைப்பில் (27.11.2025) அன்று துணை முதலமைச்சர் பிறந்த நாளில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணியும் நிகழ்ச்சி நேற்று 29.11.2025 எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் எழும்பூர் வடக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் பா.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் நல திட்டம் வழங்கு விழாவில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் தங்க மோதிரம் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான சாதனங்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் பகுதி கழகச் செயலாளர்கள் வி. சுதாகர் சொ. வேலு.எம்.சி, வானவில் விஜய் கே.எஸ். ரவிச்சந்திரன் தமிழன் பிரசன்னா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் பேரூராட்சியில் நலன் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. பார்வையிட்டு நல திட்டங்களை வழங்கினார் உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் செந்தில். பி. சேகர். என் பாண்டியன். பேரூராட்சி மன்ற தலைவர் இல்லாமல்லி ஸ்ரீதர். டி. சஞ்சய் காந்தி. சுகுமாரன். மற்றும் துணைத் தலைவர் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருப்போரூர்- — இள்ளலூருக்கு வருகை தரும்

# முதல்வருக்கு - காஞ்சி வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் — அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

*காஞ்சிபுரம், நவ.30-*

திருப்போரூர் அருகே இள்ளலூர் அருகில் தனியார் கேளிக்கை விளையட்டு பூங்காவை திறந்து வைக்க நாகை டிசம்பர் 1-ஆம் தேதி காலை வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, திருப்போரூர் ஓ.எம்.ஆர் சாலையில் இள்ளலூர் சந்திப்பில், நாளை காலை 10.00 மணியளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திரண்டு வந்து, மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

திருப்போரூர் அருகே கேளம்பாக்கத்தை அடுத்த



இள்ளலூரில், வொண்டர்லா தனியார் நிறுவனம் கேளிக்கை விளையாட்டு பூங்காவை அமைத்துள்ளது. இக்கேளிக்கை விளையாட்டு பூங்கா திறப்பு விழா நாளை டிசம்பர் 1-ஆம் தேதி காலை 11.00 மணியளவில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு இக்கேளிக்கை விளையாட்டு பூங்காவை திறந்து வைக்கிறார்.

இந்த திறப்பு விழாவிற்கு வருகை தரும் தமிழக முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, நாளை காலை 10.00 மணியளவில், திருப்போரூர் ஓ.எம்.ஆர் சாலையில் இள்ளலூர் சந்திப்பில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில், மேளதாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

சரித்திர சாதனை படைத்து வரும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் முதல்வர் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது, "நமது கடமை", "நமது உரிமை" என்ற அந்த உணர்வோடு மாவட்டம் முழுவதிலிருந்து கழகத்தினர் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று இரு கரம் கூப்பி அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 283 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை,நவ.30*

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 283 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (29.11.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55 அ, ஆச்சரியப்பன் தெரு, வராதா முத்தியப்பன் தெரு சந்திப்பு,

2) துறைமுகம் மேற்குபகுதி: வட்டம் 54, தங்க சாலை தெரு, (அரசு அச்சகம் அருகில்) சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல். சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ. நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர். இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.


